www.padippakam.com



# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

## 3 ஈழத்தவர் வரலாறு

திராவிட மக்களது ஈமச் சின்னங்கள்

இலங்கையின் ஆதிக் குடிகளுக்குரிய கலாச்சாரம் பெருங் கற்காலக் கலாச்சாரம் என தொல் லியலாளர் இனங் கண்டுள்ளனர். இறந்தோரை அடக்கம் செய்வத ற்காகப் பெரிய கற்களைப் பயன் படுத்தி ஈமச்சின்னங்களைப் படைத்ததால் இது இவ்வாறு பெயர் பெற்றது எனலாம். இம் மக்கள் படைத்த ஈமச்சினங்கள் பலவகைப்பட்டன.

கல்லறைகள், கல்பட்டங்கள், கல்மேசைகள், நடுகற்கள் போன்றவற்றோடு எவ்வித ஈமச்சின்னங்களுமின்றி அடக்கம் செய்தல் போன்றவை இவற்றுட் சிலவாகும். கடந்த நூற்றாண்டில் பாக்கர் திசாமகாரப் பகுதியில் அகழ்வினை மேற் கொண்டபோது இத்தகைய தடயங்களைக் கண்டு பிடித்தார்.

இத்தகைய ஈமச்சின்னங்களுக்கு மேலாக தாழி அடக்குமுறை திராவிடக் கலாச்சாரத்திற்குரிய ஒன்றாகும். மரணமடைந்த தலைவனைப் பெருந்தாழி (பானை) ஒன்றினுள் இட்டுப் புதைக்கின்ற ஈமத்தாழி/ முதுமக்கள் தாழி முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிட மக்களது கலாச்சாரம் என்பது இன்று நிரூபணமாகிவிட்டது.

தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிபரதணி ஆற்றுக்குத் தெற்குக்கரையில் அமைந்திருக்கும் ஆதிச்ச நல்லூரிற் கிடைத்த ஈமத்தாழி அடக்க முறைகளைப் பழந்தமிழ் இலக்கியங்கள் திராவிடக் கலாச் சாரமாகக் காட்டியுள்ளன. இத்தகைய அடக்கமுறைகளை நிகர்த்த ஈமத்தாழி அடக்கமுறைகளைப் பழந்தமிழ் இலக்கியங்கள் திராவிடக் கலாச்சாரமாகக் காட்டியுள்ளன. இத்தகைய அடக்க முறைகளை நிகர்த்த ஈமத்தாழிகள் இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் பழைய தம்பபன்னியில் பொம்பரிப்பு எனுமிடத்திற் செய்யப்பட்ட தொல்லாய்வுகளின் போது கிடைக்கப் பெற்றன.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பொம்பரிப்பில் ஒரு தாழிக்காடு காணப்பட்டது. 1970 இல் இதில் மேலும் பல அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாழிக்காடு தமிழ்நாட்டுத் தாமிரவர்ணி ஆற்றுப் படுக்கையிலுள்ள ஆதிக்க நல்லூரார்த் தாழிக்காட்டினைப் பெரிதும் ஒத்துக்காணப்படுகிறது. 1969 இல் அனுராதபுரத்திலும் 1970 இல் கந்தரோடையிலும் 1980 இல் மாந்தையிலும் அகழ்வுகள் மேற் கொள்ளப்பட்டன. இத்தகைய அகழ்வுகள் விஜயன் கூட்டத்தினரின் ஆதிக்குடியேற்றம் நடந்ததாகக் கூறும் இடங்க ளிலெல்லாம் இப்பெருங்கற்காலக் கலாச்சாரம் நிலைத்திருந்ததை எடுத்துக் காட்டியுள்ளன.

ஆதிக்க நல்லூருக்கு எதிரேயமைந்த மாந்தையும் அரிக்க மேட்டிற்கு எதிரேயமைந்த பொம்பரிப்பு ஒரே பிராந்தியம் எனக் கூறக்கூடியளவிற்கு இப்பெருங் கற்காலப் பண்பாட்டில் அதிக ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர் கூறுகின்றனர் எனச் சிற்றம்பலம் கூறுகிறார்.

முதுமக்கள் தாழிகள் இலங்கையின் வேறு பல பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை, பரந்தன், இப்பன்கடுவ, பத்தியகம்பனை, கல்மனை, கித்துல்கல், குருவித்தை, பத்தொம்பலன்ன முதலான பகுதிகளில் அகழ்ந்தெடுக்க ப்பட்ட முதுமக்கள் தாழிகள் திராவிட மக்களது குடியிரு ப்புக்கள் பரந்து நிலைத்திருந்தமையைச் சுட்டுகின்றன. 1985 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி குஞ்சுப்பரந்தனில் என்னால் முதுமக்கள் தாழி ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது.

இது இப்பிரதேசத்தில் நிலைத்து நின்ற பண்டைய திராவிட நாகரிகத்தின் பழமையைப் பறை சாற்றுகின்றன.

ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் தென்னாசியாவில் எழுத்துக்களின் தோற்ற காலத்தையிட்டு முரண்பட்ட கருத்துக்கள் நிலவினாலும் கி.மு. 3ம் நூற்றாண்டளவில் அசோகன் ஆட்சியுடன் பிராமி என்ற வரிவடிவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இதை அசோகப் பிராமி எனவும் வடபிராமி எனவும் அறிஞர் அழைத்தனர். இதையொத்த வரிவடிவங்களில் சமகாலத்தில் தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அசோக பிராமியில் காணப்படாத தமிழுக்கே சிறப்பான ழ,ம,ழ ,ற,ன,ள போன்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவை தமிழ்ப்பிராமி எனவும் திராவிடி எனவும் அழைக்க ப்படுகின்றன.

இலங்கையில் இதுவரை 1500 ற்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுட் பெரும்பாலானவை பிராகிருத மொழியிற் பெளத்தம் சார்ந்த செய்தி களைக் கூறுகின்றன. இச்சாசன மொழி இங்கிருந்த திராவிட எலுமொழியுடன் கலந்தே பிற்காலத்தில் சிங்கள மொழி தோற்றம் பெற்றது.

தமிழ்நாட்டில் பிராமிச் சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுட் பெரும்பாலானவை பிராகிருத மொழியிற் பெளத்தம் சார்ந்த செய்திகளைக் கூறகின்றன. இச் சாசன மொழி இங்கிருந்த திராவிட எலுமொழியுடன் கலந்தே பிற்கா லத்தில் சிங்கள மொழி தோற்றம் பெற்றது.

தமிழ்நாட்டில் பிராமி ச்சாசனங்கள் நன்கு ஆராய ப்பட்டுள்ளன. இலங்கைச் சாச னங்கள் பலவற்றோடு ஒப்பு நோக்கிச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ்நாட்டு பிராமிச் சாசனங்கள், வடபிராமி எழுத்துக்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. தென்னிந்திய இலங்கைப் பிராமி எழுத்துக்கள் வரிவடிவ அமைப்பில் ஒன்றுடன் ஒன்று ஒத்துள்ளன. இவற்றை ஆராய்ந்த சிங்கள் ஆய்வாளர்களான ஈ.பி. பெர்னா ண்டோ, சத்தமங்கல கருணா ரத்தின, ஆரிய அபயசிங்க போன்றோர் பெளத்த மதத்துடன் வடபிராமி எழுத்துக்கள் அறிமுகமாவதற்கு முன்னரே, தமிழ்நாட்டிலிருந்து பரவிய தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் இலங்கையில் உபயோகத்தில் இருந்துள்ளன என்கிறார்.

யாழ்ப்பாணத்தில் கிடைத்த மிகப்பழைய சாசனம் கந்த ரோடையிலே மட்பாண்ட ஓடொன்றில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த பிராமி எழுத்துச் சாசனமாகும். பிரா கிருத மொழியில் இதன் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது. ததஹபத/ தத்தவின் பாத்திரம்.



கி.பி.3 அல்லது 4 நூற்றாண்டைச் சேர்ந்த முத்திரைச் சாசனம் ஒன்று கந்தரோடையில் கிடைத்துள்ளது. செந்நிறக் கார்ணீலியன் முத்திரை ஒன்றில் விஷ்ணு பூதிஸ்ய/ விஷ்ணு பூதியனுடைய எனத் தென்பிராமி எழுத்திலே பொறிக்கப்ப ட்டுள்ளது.

ஆனைக்கோட்டையில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது ஓர் எலும்புக்கூடும் வெண் கலத்தாலான முத்திரை ஒன்றும் கிடைத்தன. இதன் வாசகம் கோவேந்தன் / கோவேதன்/ கோவதன் ஆகும்.

தமிழர் வரலாற்றுப் பாரம்பரியம் தொடர்பாக மூலாதாரங்களைத் தேடும் பணி ஒன்றின்போது கந்தரோடையில் தமிழ்ப்பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்ட கறுப்பு சிவப்பு மட்பாண்டத் துண்டுகள் சில கிடைத்தன.

**-செங்கை ஆழியான்-**

கறுப்பு சிவப்பு மட்பாண்ட வகையைச் சேர்ந்த தட்டையான சட்டி ஒன்றின் விளிம்பில் மிகத் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்த சாசன வாசகம் ஒன்று கந்தரோடையில் உள்ள மேட்டு நிலப்பகுதியில் பொதுமக்களால் வெட்டப்பட்ட குழி ஒன்றினுள்ளிருந்து மீட்கப் பட்டது. அதில் 'குணி' என்று மிகவும் தெளிவாகப் பிராமி வரிவ டிவம் காணப்பட்டது. இது பிக்கு ணி என்ற தமிழ்ப்பதத்தின் இறுதிப் பதமாக அமையக்கூடும் என சொ. கிருஷ்ணராசா தெரிவித்தார். இது கி.பி. 1ம், 2ம் நூற்றாண்டு தமிழ்நாட்டு வரிவடிவ முறையைத் தழுவியதாகவுள்ளது.

கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிற் பயன்படுத்தப்பட்டு வந்த பிராமிச்சாசனங்களிலிருந்து தென்னிந்தியாவை ஒத்த அரச முறைமை இங்கும் தோன்றியதை உறுதிப்படுத்தலாம். சாசனங்களில் காணப்படும் ஆய் ( ஆய), வேள் (வேள), என்பன இலங்கையின் சிற்றரசர்கள் சூடிய பட்டங்களாகும். 'ள்' என்ற பிராமி எழுத்து தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பெழுத்தாகும். ஆய், வேள் என்ற சிற்றரசர்களைக் குறிக்கும் 40 ற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் அனுராதபுரம், களனி, வவுனியா, பெரிய புளியாலங்குளம், திருமலை, மட்டக்களப்பு, பூநகரி ஆகிய விடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து கி.மு. 3ம் நூற்றாண்டில் அனுராத புரத்திற்குத் தெற்கிலும் வடக்கிலும் பல தமிழ்ச் சிற்றரசுகள் இருந் தனவெனக் கூறமுடியும்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல் வெட்டுக்களில் காணப்படும் பழைய திராவிட வடிவங்களான பருமக(பருமகன்/ பெருமகன்) வேள், ஆய், பரத போன்றவை திராவிடக் கலாச்சாரத்திலிருந்து துளிர்ந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் பழைய பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த சத்தமங்கல கருணாரத்தின, இலங்கையின் பழைய பிராமிக் கல்வெட்டுக்களில் தென்னிந்தியத் தமிழ்ப்பிராமி எழுத்துக்களே கையாளப்பட்டிருந்தன எனக் காட்டியுள்ளார்.

அசோகன் காலப் பிராமி எழுத்துக்கள் கி.பி. 1 ஆம் நூற்றாண்டளவில் தான் இலங்கைக் கல்வெட்டுக்களில் இடம் பெறுகின்றன.

இந்த இரு பிராமி எழுத்துக்களுக்கு இடையிலான வேறுபாடுகளை இவர் எடுத்துக்காட்டுவதன் மூலம் தென்னிந்தியப் பிராமியின் பழைமை நிலையும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈழத்தின் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் ஈழ, தமடே, தமேழ போன்ற பதங்கள் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. அண்மையில் பூநகரியில் கிடைத்த மட்பாண்ட ஓடுகளில் கிடைத்த ஈழ , ஈலா என்ற பிராமிய எழுத்துக்கள் திராவிட மக்களது குடியிருப்புக்களை நிறுவும் சான்றுகளாகும்.

சமயவழிபாடு

இலங்கையின் ஆதிமக்களான இயக்கர்கள் இயற்கை வழிபாட்டையும் நாகர்கள் நாக வழிபாட்டையும் சிவ வழிபாட்டையும் கொண்டிருந்தனர். மகாவம்சம் தரும் தகவல்களுக்கு இணங்கப் பெளத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இயக்கர், நாகர் என்போரது வழிபாட்டு முறைகள், மரவழிபாடு, லிங்கவழிபாடு மற்றும் ஜைனம், பிராமணியம் ஆகிய மதக் கருத்துக்கள் காணப் பட்டன என அறியலாம்.

பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படும் இந்து மதப் பெயர்கள் இந்த நாட்டில் பெளத்த மதம் கால் கொள்ளுமுன்னர் இந்து மதமே மக்களின் மதமாக விளங்கியதையும் இந்த இந்துக்களில் பெரும்பான்மையினர் பெளத்தர்களாக மாறியதையும் எடுத்துக் காட்டுகின்றன. பெளத்தம் இந்த நாட்டில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புகுத்தப்ப ட்டபோது பெளத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட குகைத் தானங் களை எடுத்துக் காட்டும் பிராமி வடிவத்திலுள்ள கல்வெட்டு க்களிற் காணப்படும் இந்துப் பெயர்கள், பெளத்தர்களாக இவர்கள் மதம் மாறமுன்னர் இந்துக்களாக இருந்ததைக் எடுத்துக் காட்டியுள்ளன. கிடைக்கும் ஆதாரங்களில் இருந்து பார்க்கும்போது கிறிஸ்து வுக்கு முற்பட்ட 3 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் இலங்கை மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரிடையே இந்துமத நம்பிக்கை இடையீடின்றி இருந்து வந்திருக்கின்றதென்பதை அறியலாம்.

இயக்க வழிபாடு அக்காலத்தில் விரவியிருந்த இயற்கை வழிபாட்டின் ஓரம்சம் என்பது உறுதி. ஆரம்பத்தில் கட்டப்பட்ட தாதுகோ பங்கள் அன்று இயக்க வழிபாடு போன்றன செல்வாக்குப் பெற்ற விடங்களில் தான் கட்டப் பட்டிருக்கலாம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் யக்ஷ காலவேலன் கோயில் அமைந்திருந்த இடத்தில் தாதுகோபம் ஒன்று கட்டப் பட்டதென மகாவம்சம் கூறுகிறது.

யக்ஷ மகேஜன் கோயில் கொண்ட இடத்தில் தான் ஈழத்தின் முதல் தாதுகோபமாகிய தூபராம கட்டப் பட்டதாக பரணவிதான குறிப்பி டுகிறார்.

இயக்க வழிபாட்டோடு நெருங்கிய ஒன்று தான் நாகவழிபாடு. இந்தியாவுக்கு ஆரியர் வருமுன் நிலவிய தஷ்யுக்களின் (திராவி டரின்) வழிபாடுகள் இவை எனப் பேர்க்கசன் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியத் துணைக் கண்டத்திலும் இயக்க வழிபாட்டிற்கான ஆதாரங்களுள்ளன. இது பண்டைய ஆரியர் அல்லாத மக்கட் கூட்டத்தினரின் சுதேச வழிபாட்டு முறை பிற்பட்ட இந்துமதக் கடவுளான சிவன், உமை, குபேரன் போன்றோரின் அம்சங்கள் பல மட்டுமன்றி வழிபாட்டு முறைகள் பக்தி மார்க்கம் போன்றனவும் இதனின்று வளர்ச்சி பெற்ற வையே. இயக்கர்கள் வழிபாடு ஆரியரல்லாதோர் வழிபாட்டு முறை என்பதோடு பிற்கால இந்து மதத்தில் முதற்தோன்றிய உருவச் சிலைகள் பலவும் பழைய இயக்க சிலைகளை ஒத்துக் காணப் பட்டன என ஆனந்தக்குமாரசாமி குறிப்பிடுகிறார்.

ஈழத்தில் நிலவிய இயற்கை வழிபாட்டையும் உருவவழிபாட்டையும் யக்ஷ வழிபாடு எனப் பாளி நூல்கள் அழைத்தன. இந்து மதத்திலுள்ள லிங்க வழிபாடும் ஒருவகையில் இவ்வழிபாட்டைச் சேர்ந்தது தான். இயற்கை வழிபாட்டின் இன்னொரு அம்சமாகச் சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் ஆகிய னவும் வழிபடப்பட்டன என்ப தை ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுவதாகப் பரணவிதான குறிப்பிடுகிறார். பெளத்த மதம் இலங்க்கு வருவதற்கு முன்னரேயே இந்த நாட்டில் சிவவழிபாடு நிலவியது எனக் கொள்ளலாம். பண்டு காபயன், சிவலிங்கக்கோவில் ஒன்றைக் கட்டினான் என அறியக்கிடக்கிறது. 'சிவ' என்று தொடங்கும் பெயரையும் 'சிவ' என்று முடியும் பெயரையும்

(31ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்